**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.796/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW8/PW-8 <br> Name :, மருத்துவர் சுவாதிசங்கவி <br> Father's/Husband's Name : <br> Nationality : Indian | Village: <br> Age :33 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 06.08.2025.**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திரு. ஸ்ரீதர்ராஜா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1ம் எதிரி இறந்துவிட்டார். 2, 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 4ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது காஞ்சிபுரம் தலைமை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.10.2017 ம் தேதி இரவு 11.37 மணியளவில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது ரவிச்சந்திரன் என்பவரை அவரது உறவினர் தனபால் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்திருந்தார். நான் அவரை விசாரித்தபோது வண்ணக்குடி பிள்ளையார்கோவில் தெருவில்

இருக்கும் அவரது வீட்டில் அன்றைய தினமே இரவு 9.30 மணியளவில் 8 தெரிந்த நபர்கள் மரக்கட்டை, இரும்பு ராடு, மற்றும் கல் ஆகியவற்றால் தன்னை தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1. அவரது வலது முழங்கையில் 0.5X0.2X0.1 செ.மீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு முதல் உதவி செய்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு வலது முழங்கையில் எடுக்கப்பட்ட நுண்கதிர் படத்தை பார்வையிட்டதில் அவருக்கு எலும்பு முறிவு ஏதும் இல்லாததால் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்துரை வழங்கி காயச்சான்று வழங்கினேன். (**மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அவர் 04.10.2017 ம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

அதன் தொடர்ச்சியாக கடந்த 02.10.2017 ம் தேதி இரவு 11.39 மணியளவில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது சீதாலெட்சுமி என்பவரை அவரது உறவினர் தனபால் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்திருந்தார். நான் அவரை விசாரித்தபோது வண்ணக்குடி பிள்ளையார்கோவில் தெருவில் இருக்கும் அவரது வீட்டில் வைத்து அன்றைய தினமே இரவு 9.30 மணியளவில் 8 தெரிந்த நபர்கள் மரக்கட்டை, இரும்பு ராடு, மற்றும் கல் ஆகியவற்றால் தன்னை தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1. அவரது மேல் பற்கள் 3 ஆடிக்கொண்டிருந்தது. அவருக்கு வலது முழங்கையில் 0.5X0.2X0.1 செ.மீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு முதல் உதவி செய்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு எலும்பு முறிவு மற்றும் பல் மருத்துவர் வழங்கிய கருத்துரையின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்துரை வழங்கி

காயச்சான்று வழங்கினேன். **(மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அவர் 06.10.2017 ம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். மேற்படி காயங்கள் மேற்சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள காயங்கள் ஆனது ஒரு நபர் தடுமாறி கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. மரத்தை வெட்டும்போது கிளைகள் முகத்தின் மீது விழுந்தால் பற்கள் ஆடுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் தன்னை 8 தெரிந்த நபர்கள் தாக்கியதாக என்னிடம் கூறிய விவரத்தை நான் போலிசார் விசாணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**